# முன்னுரை

சைவப் பெருமக்களின் பெருமதிப்பிற்குரிய ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் பற்றிய விபரங்களை 20ம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் அதாவது 2000 ம் ஆண்டிலும் பின்னர் 2004ம் ஆண்டின் இரண்டாம் பதிப்புக்களை வெளியிட்டதின் மூலம் பெருமான் ஆலயவரலாறு பூஜை வழிபாடுகள் மற்றும் விபரங்களை திருப்தியுடன் தெரிந்து கொண்டனர். இதனால் பலரும் பெருமான் ஆலய பணிகளில் அக்கறை கொண்டு உறுதுணை புரிந்தனர். எம் மூதாதையாரான திரு.மருதர் கதிர்காமர் பெருமான் திருவருள்ப்பிரகாரம் அவரது ஆலயத்தை நாளுக்கு நாள் முன்னேற்றியவாறு இன்று அவர் சந்ததியினராகிய நாமும் பெருமான் திருவருளை துணைகொண்டு பல்வேறு முன்னேற்றப் பணிகளை முன்னெடுக்கின்றோம். இருந்த போது சிற்சில செயற்பாடுகள் சீரியனவாக அமையாது சீரழிவதும் அதனால் பலன் கிடைக்காமல் போனதும் உண்டு மழைக்காலத்தில் பூ மண்டப அமைப்பு மிகுந்த கஸ்டத்தைக் கொடுத்துக் கொண்டே வந்தது. இதனால் பெருமான் சித்தப்படி சிறுமாற்றத்தை செய்து கூடவே சுற்றுமண்டபம் அமைக்கும் பணியினையும் தொடரப்பெருமான் திருவருளை நாடினேன் 1988ம் ஆண்டில் ஏற்பட்ட வன்முறைக்குப்பின் ஓரளவு புனருத்தாருணப் பணிகளுடன் 1988ம் மகாகும்பாபிஷேகமம் தொடர்ந்து பல பணிகளும் நிடைபெற்றன. எனினும் ஆலயத்தின் மூலஸ்த்தானங்கள் (கற்பக்கிரகம்) அந்நாளில் சுண்ணாம்புக்கலவையினால் கட்டப்பட்டதால் அவை நாளடைவில் பழுதடைந்து பல சிரமங்களை ஏற்படுத்தின எனவே அவற்றைச்சிறந்த முறையில் சீராக்க முனைந்த வேளையில் அமரர் திரு.வேலாயுதம் அவர்களின் ஆரம்ப உதவியுடன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆலயம்பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டு பணிகள் முற்றுப் பெற்று வழமையான கும்பாபிஷேக தினத்திலேயே 20 வருட காலத்தின்பின் 07-04-2008ல் பங்குனி அச்சுவினி நட்சத்திர தினத்தில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

அப்பணியுடனே சுற்று மண்டப் பணியும் மேற்கொள்ளத் திட்டமிட்ட போது குறித்த கும்பாபிஷேக தினத்தில் முடிக்க முடியாது என்பதால் அவற்றை கும்பாபிஷேக தினத்தன்று ஆரம்பித்து மண்டலாபிஷேகத்தின் பின்னர்தொடரவும் ஏற்பாடானது இதன் பிரகாரம் 19-05-2008 விசாகதினத்தன்று தொடர்ந்து பணியினை மேற்கொண்டு தற்போது திட்டமிட்டவாறு நிர்மாணப்பணி நிறைவேறியுள்ளது. நாட்டுச் சூழ் நிலையும் பொருட்கள் தட்டுப்பாடும் விலை மாற்றங்களும் அச்சுறுத்தியபோதும் இப்பணியினை பொறுப்பேற்ற ருபின்ஸ் ஸ்தாபனத்தார் பொறுமையுடன் சீரிய முறையில் செய்து முடித்தது பராட்டுதலுக்குரியது இக்கால கட்டங்களில் பெருமான் அற்புதங்கள் பல ஏற்படுத்தி தனது நிகழ்வுகள் அடியார்கள் நேர்த்திகள் இடையூறின்றி நடைபெறத் திருவருள் புரிந்தமை மறக்கமுடியாதவை அம்மகிழ்வில் மூழ்கும் நாமெல்லோரும் இம்மலர் மூலம் பரமதிருப்தி கொண்டு மேலும் பெருமான் பரிபூரணமாக்கும் நோக்கில் வெளியீடு செய்துள்ளேன் கடந்தகால நிகழ்வுகள் பெருமான் பணிகள் மற்றும் பெருமான் அன்பர்கள் அடியார்கள் செயற்பாடுகளும்விபரமாக இம்மலரில் குறிப்பிட்டுள்ளேன்.இவற்றுள் தவறுகள் இருப்பின் பெருமனதுடன் பொறுத்து திருப்தி கொண்டு பெருமான் திருவருளை எல்லோரும்பெறவேண்டுமெனப் பிரார்த்தித்துக்கொள்கின்றேன்


தொலைபேசி இலக்கம்

060 221 2914
077 3526917
வெளிநாடு
0094 602212914
0094 77-3526917

நன்றி

பெருமான் தொண்டன்
விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர்
பிரதம சிரேஸ்டகுரு. சமாதான நீதவான்
செல்வச்சந்நிதி.
தொண்டைமானாறு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழமையான வழிபாடுகளும் உற்சவங்களும்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய கந்தவேற் பெருமானின் அருளால் இவ்வாலய ஸ்தாபகர் மருதர் கதிர்காமரும் அவரது சந்ததியினரும் அன்றுதொட்டு இன்றுவரை பூஜை வழிபாட்டு முறைகளில் மாற்றமின்றி பழைய மரபுபிரகாரமே பக்திப்பூஜை வழிபாட்டினைச் செய்து வருகின்றனர் தற்போது தினசரி மூன்று காலப்பூஜைகளும் வெள்ளி மற்றும் விசேட தினங்களில் விசேட பூஜைகளும் இடம்பெறுகின்றன அத்தோடு விசேட உற்சவங்களும் ஆண்டிற்கொருமுறை மகோற்சவமும் நடைபெற பிரதி சனிக்கிழமைகளில் பிரத்தியேகமாக ஊற்றும் நல்லெண்ணையில் திருமுழுக்குப் பூஜையும் மாலையில் பிட்டு பிரசாதமும் நிவேதிக்கும் சிறப்பு வழிபாடுகளாகவும் தைப்பொங்கல் இந்துப் புதுவருட பொங்கலுடன் ஆனியில் குளிர்ச்சி (வருடாந்த) பொங்கலும் வழமையாகும் ஆனிப்பொங்கலின்போது மட்டும் அடியார்கள் ஆலய வீதிகளில் பொங்கும் வழக்கமாகும்.

தைப்பூசம் மகாசிவராத்திரி இந்துப்புதுவருடம் வைகாசி விசாகம். ஆனி உத்தரம். கதிர்காமத்தீர்த்தம் சூரசம்ஹாரம். தெய்வானை அம்மன். வள்ளி அம்மன். திருக்கல்யாணங்கள். கார்த்திகை நட்சத்திர தினங்கள். மார்கழி திருவாதிரை. போன்ற தினங்களிலும் வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம். கும்பாபிஷேகம். போன்ற தினங்களிலும் விஷேட உற்சவங்கள் நடைபெறும்.

கதிர்காமக் கொடியேற்றத்தின் போது வேற்பெருமானுக்கு உளுத்தம்பிட்டு நிவேதித்து வழியனுப்பும் வைபவத்திலும் பின் கதிர்காம தீர்த்தத்தின் பின் ஆலயத்திற்கு எழுந்தருளும் போது பயத்தம் துவயலும் இளநீரும் நிவேதித்து வழிபாடு செய்யும் போது அடியார்களின் அருட்பிரவாகம் மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளாக இன்றும் போற்றப்படுகின்றது ஆனிப்பொங்கலுக்கு முதல்வாரம் கடலில் தீர்த்தம் எடுத்து விளக்கேற்றி பூஜிக்கும் வழிபாடும் வழமையான மரபு வழிபாடாகும்.

இவை தவிர விநாயக சஷ்டி நவராத்திரி தினங்கள் திருவெம்பாவை தினங்களில் விசேட பூஜை வழிபாடுகளும் ஆனி. கார்த்திகை கடைசி ஞாயிறு தினங்களில் மரபு வழிபாடுகளும் புரட்டாதி சனிக்கிழமைகள் ஐப்பசி வெள்ளிக்கிழமைகளில் விஷேட விரத வழிபாடுகளுமாகும்.

## மகோற்சவம்

ஆவணிமாத பூரணையில் தீர்த்த வைபவமும் அதற்கு முன் உண்டான அமாவாசை நீங்கி பிரதமை கூடும் வேளை கொடியேற்ற உற்சவமும் ஐந்தாம் நாள் பகல் உற்சவம் ஆரம்பமாவதும் பத்தாம் நாள் பூங்காவனமும் மறுநாள் கைலாய வாகன உற்சவமும் தீர்த்தத்திற்கு முதல்நாள் தேரும் தேருக்கு முதல்நாள் சப்பறமும் தீர்த்த மறுநாள் ஆலயத்தொண்டு புரிந்த பூக்காரர் தொண்டர். விளக்கெடுக்கும் பெண்பிள்ளைகட்குமாக விஷேட பூஜை இடம்பெறும் தீர்த்தத்தின் பின் ஒரு வாரத்துள் வரும் திங்கட்கிழமையில் பிரயாச்சித்த அபிஷேகம் நடைபெறுவதும் வழமைக்குரியதாகும்.

## கந்தசஷ்டி விரதம்

தீபாவளி அடுத்து வரும் அமாவாசை நீங்கி பிரதமை கூடும்வேளை கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகும் சஷ்டி தினத்தன்று உபவாசம் இருந்து மறுநாள் காலை பாறணை இடம் பெறும் மாலை தெய்வானை அம்மன் திருக்கல்யாணமும் அடுத்து வரும் சுபமுகூர்த்தத்தில் வள்ளியம்மன் திருக்கல்யாணமும் நடைபெறும்.

## புராண படலங்கள்

சைவப்பெருமக்கள் போற்றும் பிள்ளையார் புராணம். கந்தபுராணம். திருவாதவூரடியகள் புராணம். மற்றும் கண்ணகி கதை என்பன இவ்வாலயத்தில் பூஜை வழிபாடுகளில் வருடம் தோறும் இடம்பெறுகின்றன பிள்ளையார் புராணத்தை விநாயகர் சஷ்டி தினத்திலும் கந்தபுராணத்தை நவராத்திரி கும்ப பூஜையுடனும் திருவாதவூரடிகள் புராணத்தை திருவெம்பாவை பூஜாரம்பத்திலும் கண்ணகி கதையை தீர்த்தமெடுப்பு தினத்திலும் ஆரம்பித்து தொடர்வதும் வழமைக்குரியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்று மண்டபத்தையும் ஏனைய பணிகளையும் திட்டமிட்டவாறு
ஒப்பேற்றும் ரூபிள்ஸ் ஸ்தாபன உரிமையாளரான
திரு.சிவசேகரமூர்த்தி அவர்கட்கு காணாஞ்சலி அளிக்கப்படுகின்றது



சுற்றுமண்டபத்தில் முதல் முதலாக பெருமாள் வீதியுலா
வருமுன் பூசகர்கள் பஞ்சாரத்தி காண்பிக்கின்றார்கள்



சுற்று மண்டபத்தில் முதன் முதலாக முருகப் பெருமான்
வள்ளி, தெய்வானை சகிதம் வீதியுலா வருதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நித் ஆலய மகா கும்பாபிஷேக சுற்றுமண்டப பணிகளுக்கான ஆசியுரை

கந்தன்.கடம்பன். எனப் பல நாமங்களைக் கொண்ட முருகப்பெருமான் செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாக பல கோடி அடியார்களை ஆட்கொண்டு இரட்சித்து பக்தர்கள் பிரமிக்கும் வகையில் அற்புதங்கள் புரிந்து ஆற்றங்கரையில் அமர்ந்து இருக்கும் பெருமானின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் 07-04-2008 திங்கட்கிழமைபகல் 12 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. இவ்வாலய ஸ்தாபகர் திரு .மருதர் கதிர்காமரின் சிரேஸ்ட புத்திரரான ஆறுமுக ஐயர் வழிவந்த விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர் சிரேஸ்ட பிரதம குருக்கள் J.P அவர்கள் தலைமையில் இம்மகாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 41 நாள் மண்டலாபிஷேகமும் பூர்த்தி விழா சந்நிதியான் ஆச்சிரமத்தின் அனுசரணையுடன் சிறப்பாக நடைபெற்றது. இவ்வாலயத்தில் நடைபெறும் பூசைகள் நிகழ்வுகள் யாவும் ஆகமவிதிக்கப்பாற் பட்டவை தென்னிலங்கையில் மாணிக்க கங்கையிருகில் வீற்றிருக்கும் கதிர்காம கந்தனுக்கு "கப்புறாளை" என அழைக்கப்படும் பூசகர்கள் மேற்கொள்ளும் பூசை முறைகளை முருகப் பெருமான் மருதர் கதிகாமருக்கு தானே நெறிப்படுத்தி 150 வருடங்களுக்கு மேலா இம்மியளவும் தவறாமல் அவரின் சந்ததியினரால் நடைபெறுகின்றது இப்புண்ணிய சேத்திரத்தில் பூசைகளும் மற்றும் நிகழ்வுகளும் ஏனைய கோவில்களிலும் வித்தியாசமாக உள்ளது குறிப்பிடத்தக்கது நிவேதனம் படைப்பதில் இருந்து விபூதி பிரசாதம் வழங்கும் வரை மாறுபட்டதே தினமும் 65 இலைகளில் நிவேதனம் படைக்கப்படும் இதில் ஒரு சிறு பங்கைத்தன்னும் பெற வேண்டுமென நூற்றுக்கனக்கான அடியார்கள் காத்திருப்பர் இவ்வாறு உண்டால் தீராத நோயும் தீருமென ஐதீகம் எனவே இதனை அமுது மருந்து எனக்கூறுவது இங்குள்ள வழக்கம் இங்கே பூசைகள் நிறைவுற்றதும் பூசகருக்கு உதவியாக நின்ற ஐயர் முதலில் தீர்த்தம் வழங்குவார் இதைத் தொடர்ந்து பிரதம பூசகர் பல ஆயிரக்கனக்கான அடியார்கள் குழுமியிருக்கும் வேளைகளிலும் தானே விபூதி பிரசாதம் வழங்குவார் அடியார்கள் முண்டியடித்து பிரதமபூசகரின் காலைத்தொட்டு கும்புட்டு தங்கள் தலையில் இடுவிப்பார்கள் இதை தாங்கள் முருகனிடம் பெற்றதாக திருப்த்தி பெறுவார்கள் சண்முக அர்ச்சனை நடைபெறும் வேளைகளில் தீபராதனை முடிந்ததும் பஞ்சாராத்தியை அடியார்கள் தொட்டு தரிசிக்க ஏதுவாக கொண்டு வருவது வழக்கம் ஒரு முறை கொழும்புத்துறை துறவி யோக சுவாமிகள் அவர்கள் செல்வச்சந்நிதிக்கு வந்து வீதியில் தனது வாகனத்தை விட்டுஇறங்காமல் வீதியெல்லாம் சிவலிங்கமாக இருக்கிறதே இப்புனித மண்ணில் எப்படிபாதங்களை வைப்பது என்று அந்த மண்ணைத்தொட்டு கும்பிட்டராம் தற்போது உள்ள வில்லு மண்டபமும் சுற்றுக்கொட்டகையும் ஆலயத்துள்ளே புகும் போது எம்மை அறியாமலே ஒரு தெய்வீக சூழலுக்கு ஈர்க்கப்படுகின்றோம் பல லட்சக்கணக்கில் நடைபெறும் திருப்பணிக்கு (2 கோடி) உள்நாட்டு வெளிநாட்டு அடியவர்களின் பங்களிப்புக்கள் மேன்மேலும் சுரக்க ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் அருள் கிடைக்கப்பிரார்த்திப்போமாக.

க.சிவக்கொழுந்து J.P
உடுப்பிட்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகப்பெருமானுக்கு சந்தனக்காப்பு சாத்துதல்



முருகப்பெருமானுக்கு சந்தனக்காப்பு சாத்துதல்
திரு.த.பாலசுப்பிரமணியம்



முருகப்பெருமானுக்கு சந்தனக்காப்பு சாத்துதல்.
நிர்வாக சபைத் தலைவர் திரு.ஆ.சிவசண்முக ஐயர்



வள்ளியம்மனுக்கு சந்தனக்காப்பு சாத்துதல்.
பிரதம சிரேஸ்ட பூசகர் திரு.க.உலககுருநாத ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம அலுவலர் அலுவலகம்.
சந்நிதி (J/383).
தொண்டைமானாறு
20-08-2008.

## தொண்டைமானாறு தெற்கு கிராம அலுவலரின் ஆசிச்செய்தி

செல்வச்சந்நிதி முருகப்பெருமான் திருவருளினால் மலர்ந்திருக்கும் உள் வீதி (சுற்று) மண்டபம் மிகச்சிறப்பான முறையில் குறுகிய காலத்தில் தலைசிறந்த சிற்பவேலைகள் கொண்டு திருப்பணிச்சபையினது. அயராத முயற்சியாலும் செல்வச்சந்நிதி ஆலய குருமார்களினது நல்லார்க்களினாலும் முருகனடியார்களதும் நிதி உதவியினாலும் ருலிஸ்ஸ நிறுவன ஊழியர்களது அயராத உழைப்பினதும் செல்வனே நிறைவேறி முருகப்பெருமான் இவ்வாண்டு மகோற்சவத்தின் போது திரு வீதியுலா வருவதற்க்கு ஏற்றதாக அமைந்துள்ளது. எனவே இம்மண்டபம் சிறப்புற அமைய பங்களிப்பு செய்த அனைவருக்கும் செல்வச்சந்நிதி வேலனுடைய திருவருள் கிடைக்க வேண்டுமென அவன் பாதங்களை வணங்கி வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

சேவையில் உள்ள
ந. சேகர் (கிராம அலுவலர்)
தொண்டைமானாறு.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் தற்போதய
நிர்வாக சபை விபரம்

போஷகர் : திரு. வி.தெய்வேந்திர ஐயர் J.P
தலைவர் : திரு.ஆ.சிவசண்முகம் ஐயர் J.P
உபதலைவர் : திரு.த. அகிலேந்திரா ஐயர்
செயலாளர் : திரு.த.குகனேந்திர ஐயர்
உப செயலாளர் : திருமதி. றஞ்சனி தங்கவடிவேல்
பொருளாளார் : திரு .ஆ. அருணாசலம்

நிர்வாக உறுப்பினர்கனர்கள் : திரு.த.பாலசுப்பிரமணிய ஐயர்
திரு.அ.லோகேஸ்வர ஐயர்
திரு.த.தங்கவடிவேல் ஐயர்
செல்வி.சி.செல்வறேசா

## ஆலயத்தின் வங்கிக் கணக்கு விபரங்கள்

இலங்கை வங்கி பருத்தித்துறைக்கிளை சேமிப்பு இல: 7345848
யாழ்ப்பாணம் செலான் வங்கிக்கிளை சேமிப்பு இல: 0850-01308424-101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவஞானச்செல்வி . எழுத்தாளர் , வைத்திய கலாநிதி

**திருமதி இந்திரா சிவயோகம்**. FRCS(Eng)FRC.Ophth

(கண் சத்திர சிகிச்சை நிபுணர்)


"SHAKTHI VIHAR" 10 DELL ROAD, STONELEIGH, EPSOM

SURREY KT17 2NG, UK    Tel: 0208 224 9820

E mail : indrasivayogham@doctors.org.uk


## "மின்னும் கதிர்வேல் விகிர்தா நினைவார் கிலேசங் களையும் கிருபை சூழ் சுடரே."

அரிதிலுமரிதாகிய மானுடப் பிறவியைப் பெற்ற யாம், தொட்ட வினை தொடரும் வினையை அறுப்பதற்கு ஒரே ஒரு வழி உண்டு என்பதை நன்கறிவோம். எனினும் ஆசாபாசத்தில் கட்டுண்டு, அவற்றால் ஏற்படும் இன்பதுன்பங்களை அனுபவித்து, மேலும் அவ்வினைகளால் சிறைப்பட்டு, சித்தத்தை சிவமாக்கும் மார்க்கத்தைத் தவற விட்டு நல் கதிதனைக் காணாது தவிக்கின்றோம்.

அப்பேற்பட்ட நிலையிலுள்ள ஆன்மாக்களாகிய யாம், செய்வது யாதென அறியாமல், திண்டாடும் வேளையில், எம் பாலுள்ள பரிவுணர்வைக்கொண்டு, நம்மை நற் சிந்தையர்களாகவும், நல்லாக்காளிகளாகவும் , நற்செயலாளிகளாகவும், எமம் வாக்குக் காயத்தை மாற்றி அமைக்க முயற்சிக்க, இறைசிந்தனை தானாகவே வந்து அமைவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் என்பதற்கு ஆட்சேபனையே இல்லை.

**ஞான கலை**

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை

வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில் வாகனனை

சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்

புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே." ............ கந்தரலங்காரம்

இதன் பொருள் பின்வருமாறு:

என் குறைபாடுகளை உணர்ந்து, மயில் வாகனனாகிய முருகப்பெருமானை நினைவுகூராது இருக்கின்றேனே, அவர் சன்னிதானத்தில் சென்று தண்டை அணிந்த அவர் திருவடிகளை தொழாதிருக்கின்றேனே, மேலும் அவரை வாயார வாழ்த்தாமல் இருக்கின்றேனே, பொய்மையை கையாண்டு உண்மை சாதிக்காதிருக்கும் எனக்கு எவ்விதத்தில் மன நிம்மதியினத்தையும் தேக ஆரோக்கியயீனத்தையும் தவிர்க்க முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவகாருணியம் எனும் தத்துவத்தை, பிரதிபலன் கருதாது கையாண்டு வர, பிற ஆன்மாக்களின் மனம் குளிர, நம் சித்தத்தை எவ்வேளையிலும் தூய்மையாக்கி முருகப்பெருமானை சிந்தையில் வைத்துவர, இறைவன் தன் இயக்கத்தை உணர்வித்து நம்மைக்:

"கருதா மறவா நெறி காண எமக்கு இரு தாள் வனசம் தந்து" கந்தரநுபூதி

இதன் பொருள் பின்வருமாறு:

வழிகாட்டிக்கொண்டே இருப்பார். அதாவது எவ்விதமான தூண்டுதலுமற்று, எக்கருமத்தைச் செய்கின்றபொழுதும் , எவ்வேளையிலும் சித்தப்பிரக்ஞனாக, ஞான கலையெனும் அறிவு நிலையை ஏற்படுத்திப் பதியாகிய இறைவனை இடைவிடாது அனுபவிக்கலாம். இந்நிலையில் உள்ளவர்களே தொண்டரென்று குறிக்கப்படும் தராதரத்திற்கு உரியவர்.

## ஸ்கந்தப்பெருமானின் தத்துவம்

* வேல் தாங்கிய முருகப்பெருமானின் தோற்றமோ சிவ சக்தி ஐக்கிய ஸ்வரூபம்.கடும் தவம் செய்த சூரபத்மனுக்கு சிவபெருமான் இரங்கி, அவன் கேட்டுக்கொண்ட "சிவ பிரான் உட்பட எவராலும் தான் அழியக்கூடாது "என்பதற்கு இணங்கி சிவபெருமான் வரம் அளித்தார். சூரனுடைய அட்டூழியம் தாங்க இயலாமல் தேவர்கள் வந்து அவல நிலையில் முறையிட, எம்பெருமான் தன்னுடைய ஐந்து முகங்களுடன் தன் ஆறாவது முகமாகிய அதோ முகத்தையும் இணைத்து ஆறுமுகங்களிலும் விளங்கும் நெற்றிக்கண்ணிலிருந்து தீப்பொறிகளாக உருவெடுத்து சரவணப்பொய்கையில் உஷ்ணம் குறையுமாறு பிரவேசித்த ஸ்வரூபமே யாம் துதிக்கும் முருகக்கடவுள் ஆவார்.

பிந்து எனும் சக்தி ஸ்வரூபமும் நாதம் எனும் சிவ ஸ்வரூபமும் இணங்க சிவசக்தி ஐக்கியம் ஏற்படுகின்றது. இங்கு ஆறு பொறிகளால் உருவெடுத்த சிவ ஸ்வரூபத்துடன் வேலாகிய சக்தி இணைய, நாத பிந்து கலா அதீதமாகிய ஒளிப்பிரகாசம் ஏற்படுகின்றது.வேலினுடைய உருவம், அடிப்பகுதி நீண்டதாகவும நடுப்பகுதி பரவியஞானம் யாவும் ஒருங்கு பெற்று அகண்ட சின்மய ரூபமாகவும், நுனிப்பகுதி கூர்ந்து ம் விளங்கும். அவ்வகையில் தெய்வீக தத்துவம் யாவும் ஒருங்கு சேர்ந்து அருவுருவத்திருமேனியாய் வீற்றிருக்கும் செல்வச்சந்நிதி அப்பனுடைய அறக்கருணையை சொற்களால் வருணிக்க இயலவே இயலாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Mrs.Indra. S . Siva-Yoham**

F.R.C.S.(Eng) F.R.C.Ophth

**CONSULTANT OPHTHALMIC SURGEON**

'Shakthi Vihar"
10. Dell Road,
Stoneleigh,
Epsom,
Surrey KT17 2ND
e-mail: indrasivayoham@doctors.org.uk


## With Reverence At The Holy Feet of Sri Selva Sannithy Murugapperuman.

A Saivite Hindu sees God in everything he perceives. To him the ground is sacred, the river is sacred, so is the Sky, and every object and living thing around him. This cardinal virtue is maximized in the explicit precincts of Selva Sannithy, and in that pristine pure state of mind and endowed with humility , and avoidance of hate and intolerance of others, the Gracious Lord seeks to take up residence, However in the era of Nandanar, and many centuries to follow many fellow beings were segregated on account of their social stratum. To all those devotees who flock in their thousands to Selva Sannithy, the open access to theTemple,by virtue of absence of compartmentalisation and fortification, further enhanced by the arduous but effectively performed restorations to the Temple by The Management, sparing no effort, are indeed laudable. My late dear Father Saiva Sigamani Justice Pon. Sri- Skanda - Rajah ,who in 1957, was in the vanguard of ensuring open access to all, in the Hindu Temples in Jaffna ,commencing in Nallur with the Blessings of Yoga Swamy,would have rejoiced. Selva Sannithy Murugan has been repository of devotion of not Tamils alone, but has provided solace to several western foreigners of aristocratic birth such a Santha Swamy- Lord Ramsbottom, and other intellectual elite of German origin- Swami Gowribala a former Professor, who resided in the precincts for long periods.Undoubtedly they flocked to seek the Lord's Nectar like Grace and their salvation.

Electronic mailing has facilitated our diaspora residing in otherwise inaccessible corners of the planet to see, and feel inspired by the unique sights of our beloved Muruga Peruman's Sannithy, in various stages of restoration as a prelude to THe Maha Kumbabishekam on Monday 7th April 2008. This has paved the way for recollecting experiences of so many years of worship. Personally speaking, the annual Festival time of the Year, was a time, when my dear sister and I, were able to do service by participation in sweeping and cleaning the built up areas, polishing brass ware, my brothers helping with flowers etc and escorting Murugan bearing flags, during the circum ambulation of the Lord. This became possible by us being sent to take up residence at Sannithy accompanied by our grand parents, during the Festival, our parents being able to take long leave,and located in outstations. To the cybernetics, that has enabled us to feast visually, and bring back all those wonderful memories, and the magnificent effort that went into the Kumbabishekam being achieved, we owe a great debt of gratitude to Visaka. Theivendram Iyer and the entire Temple management, and all the dedicated devotees for physically participating, and Sri Selva Sannithy Murugan who inspired them to do so.The preceding generations of the clergy such as Proctor Ponnuthurai Iyer and Visagaratna Iyer, and Selvanayagar Iyer would have been, very happy and proud to witness in spirit such a wonderful spectacle. May Sri Selva Sannithy Vetti Vel Peruman be with all and shower HIS BLESSINGS. Aum Saravana Bhavaya Nama.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

